கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பரிசீலிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது ; கல்வித்துறை டெபுடி செக்ரடரி, நிதித்துறை டெபுடி செக்ரடரி, டைரக்டர் ஆஃப் செகண்டரி எஜுகேஷன் இவர்கள் சேர்ந்து அதையெல்லாம் பரிசீலித்து, அவர்களுடைய ரிப்போர்ட்டைக் கூட அனுப்பிவிட்டார்கள். இப்பொழுது அது டைரக்டர் ஆப் செகண்டரி எஜுகேஷன் அவர்களுடைய பரிசீலனை யில் இருக்கிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், அவர்களுடைய தகுதிக்குத் தக்க பிரமோஷன் கொடுக்கும்போது, ரிட்ராஸ்பெக்ட்டிவ் எபக்ட் கொடுத்து அமல் படுத்த ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கமிட்டி சிபாரிசு பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். அவர்களுடைய ரிப்போர்ட்டு வந்த பிறகு, முடிவுகள் எடுக்கப்படும்.

Optional system in Secondary Schools

* 307 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the details of the proposal to introduce optional system in the Secondary Schools ; and

(*b*) when the same is expected to be given effect to?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Under the Revised pattern of School Education and Syllabus approved by the Government, pupils of Standards X and XI will choose one elective subject either under Section I or under Section II below :—

Section 1.—Algebra and Geometry, Physics, Chemistry, Biology, History, Geography, Languages (Sanskrit, Arabic or Persian).

Section II.—Secretarial course, Engineering, Agriculture, Home Science, Indian Music, Drawing and Painting.

The Schools will, however, be permitted to offer more than one elective according to the facilities available.

(*b*) The revised syllabus for Standards X and XI will be introduced in 1967–68 and 1968–69 respectively.

திரு. சா. கணேசன் : முதலாவது பிரிவிலும், இரண்டாவது பிரிவிலும் உள்ள பாட முறைகள் எல்லாப் பள்ளிகளிலும் அமலாக்கப்படுவது வரவேற்கத்தக்க ஒன்றுதான். ஆனால் வேண்டிய வாய்ப்புகள், சாதனங்கள் எல்லா பள்ளிக் கூடங்களிலும் இருக்கின்றனவா ? குறிப்பாக சர்க்கார் நிர்வாகத்திலுள்ள

எல்லா பள்ளிக்கூடங்களிலுமாவது இப்பொழுது எல்லா வசதிகளும் இருக்கின்றனவா? இல்லாவிட்டால், அவற்றைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதிலே சப்ஜக்டுகளில் ஏதாவது ஒன்று எடுக்கப்படும். இவை எலக்டிவ்ஸ். எல்லா சப்ஜெக்டுகளுக்கும் வசதி எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இல்லாமல் இருக்கலாம். இருக்கின்ற வசதிகளை வைத்துக்கொண்டு ஏற்பாடு செய்யப்படும். நாளாவட்டத்தில் வசதிகள் பெருகி எல்லா சப்ஜெக்டுகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: சார் ஆப்ஷனல் சப்ஜெக்டுகளில் கெமிஸ்ட்ரி, அல்ஜீப்ரா போன்றவை ஆங்கிலத்தில் போதிக்கப்பட்டால்தான் வசதியாக இருக்கும். தமிழிலே போதிக்கப்படும் போது பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த சப்ஜெக்டுகளை ஆங்கிலத்திலேயே போதிக்க பாடபுத்தகங்களைத் தயாரித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பல ஆண்டுக் காலமாக இந்த சப்ஜெக்டுகள் தமிழிலே போதிக்கப்பட்டு வருகின்றன. கஷ்டம் ஒன்றும் இல்லை.

Free supply of text books

* 308 Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to provide poor pupils studying in Elementary Schools with text books free of costs; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) A scheme for the free supply of text books to the poor pupils who are provided with the Midday Meals Scheme, has already been sanctioned by the Government.

(*b*) According to the scheme, the poor students of Standards I to III, who are admitted to Midday Meals Scheme are given free supply of a copy of Tamil Text Book. Besides, students of Standard III will get a copy of Arithmetic Text Book and students of Standard I will get a slate.

திரு. வை. சங்கரன்: பொதுவாக மிட்-டே மீல்ஸ் ஸ்கீமில் உள்ளவர்கள் மட்டும் என்று இல்லாமல், எல்லா ஏழைக் குழந்தைகளுக்கும் இந்த மாநிலத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டிருப்பது, மதிய உணவு பெறுகிறவர்களுக்கு என்று. அவர்கள் ரொம்ப ஏழைக் குழந்தைகள் என்று முதல் மூன்று வகுப்பிலும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.